சம்மாந்துறை பிரதேச சபை
அம்பாரை மாவட்டம்

# 1. நிதிக்கூற்றுகள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 06 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஒக்டோபர் 12 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சம்மாந்துறை பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட்ட ரூபா 325,820 தொகையான வியாபார உரிமைக்கட்டணம் வருமானமாக காட்டப்படாமல் பொறுப்பாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ஏலவிற்பனை மூலம் ரூபா 70,270 தொகைக்கு விற்பனை செய்யப்பட்ட மற்றும் அழிக்கப்பட்ட 67 வகையான அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கிரயம் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய மின்சார பாவனைக் கட்டணம் ரூபா 3,232,958 மற்றும் இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடப்படவேண்டிய வருமதிகள் ரூபா 3,462,663 என்பவற்றை செலுத்துவதற்கும் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாது 22 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

### 1.3.3 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| கட்டிடங்கள் | 10,430,029 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 1,359,230 | |
| தளபாடங்கள் பொருத்துக்கள் | 1,269,343 | |
| தீர்க்கப்படாத முற்பணங்கள் | 581,271 | முற்பணப் பதிவேடு |

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை | சபையிடம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 2,962,490 பெறுமதியான கணனிகள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள், கணனி மென்பொருட்கள் காணப்பட்ட போதிலும் அவற்றை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நி.பி. 104 | 2005 ஆம் ஆண்டில் காணாமல் போன ரூபா 95,670 பெறுமதியான மின்சாரப் பொருள் இருப்பு மற்றும் 2015 ஆம் ஆண்டில் காணாமல்போன ரூபா 35,000 பெறுமதியான புகைப்பட கருவி தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவில்லை. |
| (ii) நி.பி. 371 | 06 மாதங்களுக்கு மேலாக மாற்றப்படாத ரூபா 2,220 பெறுமதியான 02 காசோலைகள் தொடர்பில் சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நி.பி. 571 | ரூபா 2,316,515 மொத்தப் பெறுமதியான 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த 129 வைப்புக்களை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 4,556,592 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 11,011,557 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 6,454,965 பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது மீளாய்வாண்டு இறுதிவரை அறவிடப்படவேண்டிய ரூபா 15,268,779 கூட்டு மொத்தமான வீதவரிகளில் ரூபா 1,406,851 தொகையே மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்தது.

2.2.2 உத்தரவுப்பத்திரக்கட்டணம்

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வியாபார உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய வியாபார உத்தரவுப் பத்திரக் கட்டணம் ரூபா 33,396 தொகை 12 ஆண்டுகளாக அறவிடப்படாது நிலுவையாக காணப்படுகின்றது.

2.2.3 விளம்பரப் பலகைகளுக்கான கட்டண அறவீடு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரிவு 126 மற்றும் 1644 ஆம் இலக்க 2010 மார்ச் 05 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி அறிவித்தல்களின் பிரகாரம் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் நிறுவிய 40 விளம்பரப் பலகைகளுக்காக அறவிடப்படவேண்டிய ரூபா 105,550 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 பொதுச்சந்தைக் கடைத்தொகுதிக்கான வாடகை அறவீடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1999 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தைக்கடைத் தொகுதியில் உள்ள 84 கடைகளில் 08 கடைகள் நிர்மாணிக்கப்பட்ட திகதியிலிருந்து 2016 யூலை 25 ஆந் திகதி வரை எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்படுகின்றது.

(ஆ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான பொதுச் சந்தைக் கடை வாடகை நிலுவை ரூபா 1,489,176 தொகையானது 04 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாது காணப்படுகின்றது.

(இ) கணக்காய்வுக்கு கிடைக்கப்பெற்ற எழுத்து மூல கூற்றின்படி இப்பொதுச் சந்தைக்கு அண்மித்துள்ள தனியார் கடைகள் குறைந்தது மாதாந்தம் ரூபா 6,000 தொடக்கம் ரூபா 20,000 வரையான வீச்சில் வாடகைக்கு வழங்கப்படுகின்ற போதிலும் சபைக்குச் சொந்தமான இக்கடைகள் புதிய விலை மனுக்களை கோராது மாதாந்தம் ரூபா 585 தொடக்கம் ரூபா 3,335 தொகை வரையான வீச்சில் வாடகைக்கு வழங்கிவருவதனால் சபை அண்ணளவான ரூபா 2,700,000 தொகையை வருடாந்தம் இழந்து வருகின்றது.

2.2.5 இறைச்சிக் கடைக் குத்தகை

2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இறைச்சிக் கடைக் குத்தகை நிலுவை ரூபா 5,537,053 தொகையில் ரூபா 2,271,293 இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாது காணப்படுகின்றது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் நகர மண்டபத்தினை வாடகைக்கு வழங்கியதன் வகையில் அறவிட வேண்டிய ரூபா 38,500 தொகையை 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபையினால் 68 களஞ்சியப் பொருட்கள் ஏலவிற்பனைக்காகவும், 21 பொருட்கள் திருத்தியமைப்பதற்காகவும், 21 பொருட்கள் மற்றும் 912 நூலகப்புத்தகங்கள் அழிப்பதற்காகவும் சிபார்சு

செய்யப்பட்டிருந்தும் அவை தொடர்பாக 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட ரூபா 57,695,000 பெறுமதியான 05 வாகனங்கள் மற்றும் அரசாங்க நிர்வாக அமைச்சு மற்றும் மாகாண உள்ளூராட்சித் திணைக்ளத்திடமிருந்து பெறப்பட்டு சபையினால் பன்படுத்தப்பட்டுவருகின்ற 10 வாகனங்களை உரிமை மாற்றம் செய்வது தொடர்பில் 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2016 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான ‘‘புதிய கிழக்கு பஸ் கம்பனி’’ இனால் சபைக்குச் செலுத்த வேண்டிய கட்டிட வாடகையான ரூபா 113,763 தொகை 03 ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் வேலையைவிட்டு நீங்கிய 08 ஊழியர்களுக்கு பிரதேச சபையினால் வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை ரூபா 55,053 தொகை 01 ஆண்டு தொடக்கம் 04 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

3.2 பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டம்

---------------------------------------------------------------------

ஒரு வீதிக்கான மதகு நிர்மாணிப்பதற்காக 8.76 கியுபிக் மீற்றர் கொங்ரீட் கலவையும் 50 சதுர மீற்றர் சட்டின் பலகைகளும் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டு அவற்றிற்காக கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், கணக்காய்வு பரீட்சிப்பின்படி 6.01 கியுபிக் மீற்றர் கொங்ரீட் கலவையும் 34 சதுர மீற்றர் சட்டின் பலகைகளும் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி சபையினால் ரூபா 60,480 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------------

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | i. நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல்.<br>ii. பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படும் சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |